**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.155** **நாள் : 03.07.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

இன்று (03.07.2025) மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், இராயபுரம் மண்டலத்தில் வார்டு 50, 51, 52, 53 ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள கால்நடை காப்பகம், வண்டல் மண் சேகரிப்புத் தொட்டிகளைத் தூர்வாருதல், இராபின்சன் விளையாட்டு மைதானம், மழைநீர் வடிகால் கட்டும் பணி, போஜராஜன் நகர் சரங்கப்பாதை பணி, பொதுக் கழிப்பிடம் ஆகியவற்றினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இராயபுரம் மண்டலம், பேசின் பிரிட்ஜ் சாலையில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ள கால்நடை காப்பகத்தை மாண்புமிகு மேயர் அவர்கள் பார்வையிட்டு, அங்கு கால்நடைகள் முறையாக பராமரிக்கப்படுவதை ஆய்வு செய்தார். இக்காப்பகத்தில் கூடுதலாக கால்நடைகளைப் பராமரிக்கும் வகையில் காலியாகவுள்ள 14,972 சதுரடி பரப்பில் கால்நடை காப்பகத்தினை விரிவு படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், பேசின் பிரிட்ஜ் சாலையில் மழைநீர் வடிகாலில் உள்ள வண்டல் மண் சேகரிப்புத் தொட்டியில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, வாகன இயந்திரம் மூலம் ( Sucker lorry) வண்டல் மண் தூர் வாரப்படுவதைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, வார்டு – 50, தெற்கு மாதா சாலையில் மூலதன நிதியின் கீழ் ரூபாய் 66 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து முடிக்கப்பட வேண்டிய இதரப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் இப்பகுதியில் கைவிடப்பட்டு நீண்ட நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களை அப்புறப்படுத்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு – 51ல் ரூபாய் 97 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ள இராபின்சன் விளையாட்டு மைதானத்தைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இம்மைதானத்தின் முன்பகுதியில் பள்ளமாக உள்ள இடத்தினை மழைநீர் தேங்காமல் மண் போட்டு நிரவிடவும், இம்மைதானத்தில் உள்ள மேடைப் பகுதியில் மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, கல்லறை சாலையில், 52 ஆவது வார்டு அலுவலகத்திற்கு அருகில் உள்ள பொதுக் கழிப்பிடத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, கழிப்பறைகளை சுத்தமாகப் பராமரித்திட பணியாளரிடம் அறிவுறுத்தினார். பின்னர், 52 ஆவது வார்டு இரயில்வே சந்திக்கடவு அருகில் போஜராஜன் நகரையும் கண்ணன் நகரையும் இணைக்கும் வகையில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வரையறுக்கப்பட்ட வாகன சுரங்கப்பாதைப் பணிகளைப் பார்வையிட்டு, இப்பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி பா. வேளாங்கண்ணி, திரு.ரா.சுரேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**